# DEPOSITION OF WITNESS
# CHAPTER CODE OF CIVIL PROCEDURE
## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI.

## **OS . No. 7/2016**

Deposition of Witness : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மாதவன் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | சங்கரலிங்கம் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.03.2024.

(சாட்சி அழைக்கபட்டு சத்தியபிரமாணம் செய்யபட்டார்)
சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்

**5, 10, 15 முதல் 18 , 22 முதல் 26, 28, 31 முதல் 34 பி.வா.கு.வி.:**

| | | |
|---|---|---|
| கேள்வி | : | தாவா சொத்து முழுமையும் உங்களுடைய அனுபவத்தில் இருப்பதாக தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளீர்களா என்றால்? |
| பதில் | : | ஞாபகமில்லை. |
| கேள்வி | : | தாவா சொத்தினுடைய நான்குமால் விபரத்தை உங்களுடைய வழக்குரை சொத்து விபரத்தில் சொல்லியுள்ளீர்களா என்றால்? |
| பதில் | : | சொல்லியுள்ளேன் |
| கேள்வி | : | தாவா சொத்தின் நான்குமால் விபரங்களை பிராதில் சொல்லவில்லை என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | தற்போது அதை சொல்ல முடியுமா என்றால்? |
| பதில் | : | சர்வே நம்பர் எண்கள் ஞாபகமில்லை. |
| கேள்வி | : | தாவா சொத்தின் நான்குமால்களின் உரிமையாளர்கள் பெயர்கள் என்ன என்றால்? |
| பதில் | : | கிழக்கே – வாதிகள் நிலங்களும், வடக்கு – அருணாச்சலம் கவுண்டர் வகையறா, தெற்கு – சின்ன தொட்டப்ப கவுண்டர் வகையறா, மேற்கே – சரியாக யாருடைய இடம் என ஞாபகமில்லை. |

| | | .2. |
|---|---|---|
| கேள்வி | : | நீங்கள் மேற்சொன்ன நான்குமால் விபரங்கள் சரியல்ல என்றால்? |
| பதில் | : | தவறு. |
| கேள்வி | : | தாவா சொத்து தற்போது வீட்டடி நிலமா அல்லது விவசாயம் நிலமா என்றால்? |
| பதில் | : | விவசாய நிலம். |
| கேள்வி | : | மேற்படி விவசாய நிலம் பாசன நிலமா அல்லது மானாவாரி நிலமா ? |
| பதில் | : | முதலில் கிணற்று பாசனமாக இருந்தது, தற்போது மானாவாரியாக உள்ளது. |
| கேள்வி | : | தாவா சொத்திற்கு பாசன கிணறு உள்ள சர்வே எண் 393/1 மற்றும் 393/7 ல் உள்ளது என்றால்? |
| பதில் | : | 393/1 ல் இரண்டு கிணறுகளும், 393/7 ல் ஒரு கிணறும் இருந்தது. எனக்கு தெரிந்து 393/1 ல் தான் பாசனம் செய்தார்கள். |
| கேள்வி | : | தாவா சொத்திற்கு பாத்தியப்பட்ட கிணறு விபரங்களும், அதன் விஸ்தீரணத்தையும் வழக்கு சொத்து விபரத்தில் நீங்கள் சொல்லவில்லை என்றால்? |
| பதில் | : | சொல்லவில்லை. |
| கேள்வி | : | 393/1 மற்றும் 393/7 ல் கிணறில் உள்ள சொத்தில் தாவா சொத்துக்கு எவ்வளவு பங்கு பாத்தியம் என்றால்? |
| பதில் | : | தாவா சொத்து 393/3 ஆகும். தாவா சொத்திற்கு 393/1 கண்ட கிணற்றில் பாத்தியமில்லை. |
| கேள்வி | : | தாவா சொத்தில் தற்போது பெரும்பகுதி இந்த வழக்கின் பிரதிவாதிகளின் கட்டிடங்கள் எதுவும் இருக்கிறதா என்றால் ? |
| பதில் | : | ஏறக்குறைய 1 ஏக்கர் 94 செண்டில் 70 செண்டு அளவிற்கு கட்டிடங்கள் இல்லை ., மற்ற பகுதியில் கட்டிடங்கள் உள்ளது. |
| கேள்வி | : | கட்டிடங்கள் உள்ள பகுதியில் மேலசொக்கநாதபுரம் பேரூராட்சியால் தார்சாலை போடப்பட்டுள்ளது என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | அதே போல் பேரூராட்சியால் தெரு மின்விளக்குகளும் அமைக்கபட்டுள்ளது என்றால்? |
| பதில் | : | இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் மேற்சொன்ன அனைத்தும் செய்து இருக்கிறார்கள். |
| கேள்வி | : | அதே போல் பேரூராட்சியால் தெரு மின்விளக்குகளும் அமைக்கபட்டுள்ளது என சொல்லும் போது பேரூராட்சிக்கு இந்த வழக்கு சம்மந்தமாக அறிவிப்பு ஏதும் கொடுத்தீர்களா என்றால்? |
| பதில் | : | ஞாபகமில்லை |
| கேள்வி | : | பேரூராட்சயை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால்? |

| | | |
|---|---|---|
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | இந்த வழக்கில் பிரதிவாதிகளால் கட்டப்பட்ட கட்டிடங்கள் 1995 ஆம் ஆண்டு முதல் 2000 ம் ஆண்டு வரை பிரதிவாதிகளால் கட்டப்பட்டது என்றால்? |
| பதில் | : | சரியல்ல. 2013 க்கு பிறகு தான் கட்டினார்கள். |
| கேள்வி | : | நீங்கள் இந்த வழக்கு தாக்கல் செய்தது 2016 ஆம் ஆண்டு என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | மேற்படி கட்டிடங்களை வழக்கு சொத்து விபரத்தில் குறிப்பிடவில்லை என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | வாசாஆ1 என்பது உங்கள் அப்பாவும், உங்களுடைய சின்னதாத்தா கெப்பன்னகவுண்டர் இடையே ஏற்பட்ட பாக பிரிவினை பத்திரம் என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | அந்த வாசாஆ1ல் மொத்தம் உள்ள 2 ஷெட்யூல்களில் பி ஷெட்யூல் உங்கள் தகப்பனாருக்கு கொடுக்கபட்டது என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | பி ஷெட்யூலில் மொத்தம் 15 அயிட்ட சொத்துக்கள் உள்ளன என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | அந்த 15 லக்க சொத்துக்களில் தாவா சொத்து கண்ட சர்வே எண் 393/3 உள்ளடங்கியதா என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | தாவா சொத்து பி ஷெட்யூலில் கண்ட 15 லக்கங்களில் ஏதும் சொல்லபடவில்லை என்றால்? |
| பதில் | : | காட்டியுள்ளார்கள். எத்தனாவது லக்கத்தில் உள்ளது என்பது எனக்கு தெரியாது. |
| கேள்வி | : | 15 லக்க சொத்துக்களில் தாவா சொத்து காட்டப்படவில்லை என்றால்? |
| பதில் | : | சரியல்ல. சொல்லியுள்ளார்கள் . 15 லக்கங்களில் அடங்கியதால் சொல்லவில்லை. |
| கேள்வி | : | 15 லக்க சொத்துக்களில் தாவா சொத்து எத்தனாவது அயிட்டமாக காட்டப்பட்டுள்ளது என்று உங்களால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால்? |
| பதில் | : | 15 அயிட்டங்களில் சொல்லபடவில்லை. |

| | | |
|---|---|---|
| | | .4. |
| கேள்வி | : | சர்வே எண் 393/3 நிலத்திற்கு சர்வே எண் 393/1 ல் உள்ள கிணற்றில் கண்ட மொத்தம் பாகம் 9 ல் 2 பாகம் தாவா சொத்திற்கு சொல்லபட்டுள்ளதா என்றால் ? |
| பதில் | : | அப்படி இல்லை. |
| கேள்வி | : | அதே போல தாவா சொத்திற்கு சர்வே எண் 393/7 ல் உள்ள கிணற்றில் 9 ல் 2 பாகம் பாத்தியப்பட்டது என்று வாசாஆ1ல் சொல்லப்பட்டுள்ளதா என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | உங்களுடைய பாகமான வாசாஆ1ல் பி ஷெட்யூல் 2 லக்கமாக தாவா சொத்திற்கு 393/1ல் உள்ள கிணற்றில் 9 ல் 2 பாகம் பாத்தியம் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால்? |
| பதில் | : | இல்லை. |
| கேள்வி | : | அந்த பாகபிரிவினை பி– ஷெட்யூல் 2 மற்றும் 3 லக்கமாக கிணறு பாத்தியம் மட்டும் தான் சொல்லப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் சரியா, தவறா? |
| பதில் | : | தவறு. |

அசா1ன் குறுக்கு விசாரணை இரு தரப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 01.03.2024 அன்று வெள்ளிகிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது

S GOPINATHAN

Digitally signed by S GOPINATHAN
Date: 2024.03.01 19:24:17 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
01.03.2024.